# கண்ணீர் அஞ்சலி

**யாழ்பாண கல்விப் பணிப்பாளரும் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் இரத்தினராசா அவர்கள் 30.03.98 அன்று சென்னையில் காலமானார். ஈமைக்கிரியைகள் யாழ்ப்பாணம்-கொக்குவிலில் 05.04.98 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும்.**



எமது கல்லூரியின் பழைய மாணவரும், முன்னைநாள் ஆசிரியரும், தற்போதைய யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளருமான ***அமரர் இரத்தினராசா*** அவர்களது திடீர் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்தோம். பிறந்த மண்ணுக்கும், பெற்ற தாய்-தந்தையர்க்கும், கல்வி பயின்ற கல்லூரிக்கும் பெருமையாகத் திகழ்ந்த வேலணை மத்திய மகாவித்தியாலய மாதாவின் மகிமை மிக்க மைந்தர்களில் ஒருவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

மேலும் அவரது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பால் துயருற்றிருக்கும் மனைவி, மக்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

## வேலணை மத்திய மகா வித்தியாலயம்

**பழைய மாணவர் சங்கம் - கனடா**

ஈழநாடு April 02/98